**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2020**

----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 11 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | Updating the Primary Health Performance Initiative (PHCPI) செயற்திட்டத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது | மீள அனுப்பப்பட்டிருந்த தொகை தவறுதலாக 2020 ஆம் ஆண்டுக்குரிய செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் | இந்த தவறினை திருத்தி 2021 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு வெகுமதியளிக்கப்பட்டிருந்த ரூபா 16,961,796 தொகையில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கு மீள செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,180,025 தொகையான வெகுமதி வருமானத்தில் குறைத்துக் காண்பிப்பதற்கு பதிலாக செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு வழுவொன்று என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுவதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இதற்கு இணங்காத வகையில் தேசிய கண் வங்கிக்கு குறித்த வருமானமி மற்றும் செலவினங்கள் காசு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், தேசிய கண் வங்கிக்கு உரிய முதலீட்டு மற்றும் வங்கிக் கணக்குகளில் மீதிகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், தேசிய கண் வைத்தியசாலைக்குரிய நிலையான சொத்துக்கள், ஏனைய நடைமுறை சொத்துக்கள் மற்றம் நடைமுறை பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. அவ்வாறே அந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தகவல்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கண் வங்கி, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் தனியான பிரிவொன்றாக அன்றி செயற்திட்டம் ஒன்றாக நடாத்தப்படுவதனால், அதன் பிரகாரம் ஏனைய குறுங்கால செயற்திட்டங்களைப் போன்றே குறித்த வருமானம் மற்றும் செலவினங்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது என்பது, அந்த வருமானம் மற்றும் செலவினங்கள் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்பது, கண் வங்கிக்காக குறித்த வருடத்தின் முதலீடு அல்லது நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படவில்லை என்பது, நிலையான சொத்துக்கள் பிரதான நிறுவனத்தினால் வெகுமதியளிக்கப்பட்டவை என்பது, மேலும், தேசிய கண் வங்கியை தொடர்ந்தும் நடாத்திச் செல்லல் தொடர்பில் இதுவரையிலும் தீர்மானமொன்று எடுக்கப்படவில்லை என்பது, மேலும், கண் வங்கிக்கு சாட்டுதல் அல்லது தனியானதொரு நிறுவனமாக நடாத்துதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினங்களை போன்றே, கண் வங்கியின் பரிவர்த்தனைகளும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறே, தேசிய கண் வங்கிக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அனைத்து தகவல்களும் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய கண் வங்கியைப் போன்றே சட்டரீதியான அலகொன்றாக தாபிக்கப்படும் வரையிலும் அதன் அனைத்து நடவடிக்கைகளையும் கணக்கு வைப்பதற்கும், அந்த தரவுகள் மற்றும் தகவல்களை கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 381 | திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2016 ஆண்டின் போது அரச வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுட, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 16,911,230 தொகையாக காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 381 பொருந்துவது அமைச்சு இல்லது திணைக்களமொன்றின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளுக்கு எனவும், தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் சட்டரீதியான சபையொன்று என்பது, இலங்கை வங்கியின் உத்தியோகபூர்வ வங்கியொன்றின் ஊடாக நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் என்பது, நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அறிவுரைகள் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் வட்டி வருமானத்தினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் மற்றும் நடைமுறைக் கணக்கின் மீதியை கட்டுப்படுத்தும் நோக்கில் 2016 ஆம் ஆண்டின் போது சேமிப்பு கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது என்பது, சுகாதார செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டுள்ளமை மற்றும் இது தொடர்பில் அரச நிதி பணிப்பாளர் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நாயகத்திடம் கோரிய போது இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கோரப்படவில்லை என வாய்மொழிமூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் 19 பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்குரிய தீர்ப்பனவு செய்யப்படாத நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 6,910,491 தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத பிடி காசினை நிதியத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 80,133,424 ஆன மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 90,462,688 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 10,329,264 இற்கான பின்னடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைதலுக்கு மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம், ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் மாற்றல்கள், வெகுமதிகள் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 211,250,260 இனால் குறைவடைந்தமை முக்கியமான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் தேசிய கண் வங்கியை நிறுவுவதற்காக சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவனத்துடன் 2010 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு ஒன்றாக நிறுவுவதற்காக 2013 ஆகஸ்ட் 29 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை | இலங்கை தேசிய கண் வங்கிச் சட்டம் தற்போது அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளதுடன், அமைச்சின் சட்டப் பிரிவு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது மற்றும் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு தேசிய கண் வங்கி சட்டரீதியான நிறுவனமொன்றாக | இலங்கை தேசிய கண் வங்கி வேறான நிறுவன கட்டமைப்பு உடைய சட்டரீதியான அலகு ஒன்றாக நிறுவுதல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேசிய கண் வங்கி சட்டம் ஒன்றின் மூலம் வேறாக நிறுவனம்சார் கட்டமைப்பொன்றுடன் அலகு ஒன்றாக நிறுவுவதற்கு மற்றும் அதன் கொடுக்கல் வாங்கல்களை தனியானதொரு நிதிக்கூற்றுத் தொகுதியை தயாரிப்பதற்கு 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபிக்கப்பட்டதன் பின்னர் தனியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஆ) | இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு என நிறுவும் வரை அதன் அலுவல்களை செயற்திட்டம் ஒன்றாக தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கும் 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் படி ஆளணியினை சேர்ப்பதற்காக மற்றும் சம்பளம் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறாயினும் 33 இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 1.1 இன் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிப்பதற்காக தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்காத காரணத்தினால் அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்படுவதற்கு முடியாமல் இருந்தது. | அமைச்சரவைச் செயலாளரின் அமப/13/1172/509/052 ஆம் இலக்க 2013 செப்தம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் பிரகாரம் இலங்கை கண் வங்கியை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் பிராகரம் நிறுவுவதற்கு நியதிச்சட்டம் விதிக்கப்படும் வரையிலும் தேசிய கண் வங்கியின் பணிகள் செயற்திட்டமொன்றாக தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது. | 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி, தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிக்க முடியாமையால் மற்றும் அதன் படி ஆளணியினரை சேர்ப்பதற்கு முடியாமையால் இது தொடர்பாக அமைச்சரவையை அறிவுறுத்த வேண்டியிருந்ததுடன், எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாகய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 149(1) ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து வரவு வரிகள், வீதவரிகள் மற்றும் கட்டணங்கள் ஆகிய வழிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களும், உரிய பணிக்காக ஒதுக்கப்படாத குடியரசிற்கு சொந்தமான ஏனைய அனைத்து வருமானங்கள் மற்றும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2009 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் தேசிய இரத்த தான சேவை குருதி பிளாஸ்மாவினை விற்பனை செய்தமையால் ஈட்டப்பட்டிருந்த ரூபா 133,219,064 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த தொகையில் ரூபா 120,047,670 | 2009 ஆகஸ்ட் முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேசிய இரத்த மாற்றச் சேவையினால் குருதி பிளாஸ்மாவினை விற்பனை செய்தமையால் ஈட்டப்பட்டிருந்த ரூபா 120,047,670 தொகை மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது 2018 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் என்பது மற்றும் எஞ்சிய தொகையான ரூபா 13,171,394 தொகையை எதிர்காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குருதி பிளாஸ்மாவினை விற்பனை செய்தமையால் ஈட்டப்பட்டிருந்த தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக குருதி மாற்றச் சேவைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொகை 2019 ஆகஸ்ட் மாதம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக மீண்டும் இரத்த மாற்றச் சேவைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், குருதி பிளாஸ்மாவினை விற்பனை செய்தமையால் கிடைத்திருந்த ரூபா 13,171,394 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது தொடர்ந்தும் நிதியத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 4 முதல் 8 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,382,346 கூட்டுத்தொகையான கடன் பட்டோர் மீதிகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அறவிட தவறியிருந்தது. | நிர்மாணங்கள் உரிய முறையில் நிறைவு செய்யப்படாத காரணத்தால் காசாக்கப்பட வேண்டியிருந்த செலிங்கோ காப்புறுதிக் கம்பனியால் வெளியிடப்பட்டிருந்த ரூபா 1,372,346 தொகையை அறவீடு செய்வதற்காக உரிய தரப்பினருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | நீண்ட காலமாக அறவிடப்பட முடியாதிருந்த இந்த தொகையை அறவீடு செய்ய அல்லது அறவிடாமைக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் காணப்பட்டால் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது உரிய முறையில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த 13 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 2.3 மில்லியனை வெகுமதியாக வழங்கிய நிறுவனத்திற்கு மீள அனுப்புவதற்கு அல்லது பொது நிதியத்திற்கு பெற்றுக்கொள்வேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்குரிய வெகுமதியளிக்கப்பட்ட தொகைகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று பொது நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | செயற்திட்டங்களுக்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் அல்லது இணக்கப்பாடுகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும். அவ்வாறு அல்லாத போது எஞ்சிய தொகை தேசிய சுகாதார நிதியத்தின் பொது நிதியத்திற்கு பெற்றுக்கொள்வேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | புதிய ஆயுர்வேத பொருட்கள் 10 இனை திறந்த சந்தைக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியனான மானியமொன்று ஆயுர்வேத மருந்துப்பொருள் | புதிய ஆயுர்வேத பொருட்கள் 10 இனை திறந்த சந்தைக்கு அறிமுகப்படுத்தி உற்பத்திய இயலளவினை அதிகரிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது இந்த ரூபா 15 மில்லியனான | ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குப் பதிலாக புதிய மருந்துப்பொருட்களின் அலகொன்றின் இலாபத்தில் 10 சதவீதம் படியாக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு கூட்டுத்தாபனம் கொள்கை ரிதியாக இணங்கியிருந்தது. 2015 யூன் மாதம் முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் கூட்டுத்தாபனத்தினால் நிதியத்திற்கு ரூபா 1,260,427 மாத்திரம் அனுப்பப்பட்டிருந்ததுடடன், மீளாய்வாண்டுக்கு உரியதாக கூட்டுத்தாபனத்திடமிருந்து எந்தவொரு தொகையையும் அறவிடத் தவறியிருந்தது. | மானியமொன்று வழங்கப்பட்டது தேசிய சுகாதார அபிவிருத்தி அதிகாரைச்சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் சுகாதார நலன்புரி சேவைகளை வழங்கும் நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக என்பது, 2015 முதல் 2019 வரையிலுமான காலப்பகுதியினுள் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் விற்பனை வருமானத்தில் ரூபா 1,260,427.28 ஆன தொகை தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்பது மற்றும் 2020 ஆம் ஆண்டுக்குரிய பணத்தை செலுத்துமானு நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | வேண்டும். |
| (ஈ) | அரச மருத்துவமனையொன்றுக்காக அத்தியாவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் மருத்துவமனையின் பழுதுபார்த்தல் பணிகளுக்கு தேவையான நிதியினைத் திரட்டும் நோக்கில் சுகாதார அபிவிருத்தி லொத்தர் சீட்டு முறைமை 1998 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு சீட்டிழுப்புத் தடவைக்கும் முதன்மையாக அந்த தடவையின் போது நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு அந்த பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் கிடைத்திருந்த ரூபா 399,767,068 ஆன லொத்தர் வருமானத்தில் மருத்துவமனைகளுக்கு | எதிர்வரும் வருடங்களில் இது தொடர்பில் நட்டவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது. | சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறையின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும். |

உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் மருத்துவமனையின் பழுதுபார்த்தல் பணிகள் போன்ற நோக்கத்துடனான பணிகளுக்கு முறையே ரூபா 20,578,392 மற்றும் ரூபா 86,344,001 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அது ஒட்டுமொத்த லொத்தர் வருமானத்தின் 21 சதவீதம் மாத்திரம் ஆகும்.

### 3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்கு 1996 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 11 குறிப்பிட்ட கருமங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 8.09 மில்லியன் நன்கொடை 3 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சில் அக் குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நன்கொடைகளை பயன்படுத்தி குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளும் படி குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதியத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த நிதியினை அந்த இலக்கிடப்பட்ட கருமத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் இலங்கை சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியம் பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான பொது நிதியத்தில் காணப்பட்ட செலவு மீதி ரூபா 411,069,837 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டினுள் ரூபா 144,191,754 தொகை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் நிதியத்திற்கு கிடைக்கும் பணம் குறிப்பிட்ட வருடத்திலேயே பயன்படுத்தப்படுவது இல்லை எனவும் மற்றும் தேசிய பாதீட்டின் மூலம் நாட்டின் அனைத்து சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்களின் அபிவிருத்திற்காக ஏற்பாடுகள் வழங்கப்படுவதனால் தேசிய பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத அவசர தேவைகளுக்காக நிதியத்தில் இருந்து ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன என. | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை விரைவாக தயாரிப்பதற்கு மற்றும் அதன்படி இலக்குசார் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் சுகாதார பாதுகாப்பு அலுவல்களுக்காக பணம் செலவிடுதல் நிதியத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தமையால் அந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக கூடியளவு நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். சுகாதார துறையில் தேவைகள் என இனங்காண்பதற்கு |

காரணமாக பயன்படுத்தக்கூடியதததாக இருந்த நிதி ரூபா 555,261,591 ஆன போதிலும், அவற்றுன் ரூபா 49,280,114 மாத்திரம் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியின் பயன்பாடு 9 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

மற்றும் தேவைகளுக்காக பணத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்